## சார்பு நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்

**முன்னிலை :** B. ராஜா, பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி, வாணியம்பாடி.

2024 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ம் நாள் திங்கட்கிழமை
(2054 திருவள்ளுவர் ஆண்டு, ஶ்ரீ சோபகிருது வருடம் மாசி திங்கள் 14 ம் நாள்)

**இடைநிலை மனு எண்.222/2023,**
**இடைநிலை மனு எண்.223/2023**
**இடைநிலை மனு எண்.224/2023**
**in**
**அசல் வழக்கு எண்.71/2012**

1. புஷ்பவதி (இறப்பு)
க/பெ நாராயணசாமி .... மனுதாரர்/ வாதி

2. நாராயணசாமி
த/பெ கிருஷ்ணசாமி
3. விஜயசீனிவாசன்
த/பெ நாராயணசாமி – .... மனுதாரர்கள்/ கட்சி சேர்க்க வேண்டிய நபர்கள்

/ எதிர் /

1. உமாபதி (இறப்பு)
த/பெ பெரியண்ணண் (எ) முனுசாமி
2. செல்விகரசி
க/பெ பிரகாசம் ........ எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

3. ஜீவா
த/பெ உமபதி
4. சுபாஷினி
த/பெ உமாபதி
5. சித்ராபதி
த/பெ உமாபதி –– எதிர்மனுதாரர்கள் / கட்சி சேர்க்கப்பட வேண்டிய நபர்கள்

அனைத்து மனுக்களும் இறுதியாக, கடந்த 29.01.2024ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அனைத்து மனுக்களிலும், மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். நித்தியானந்தம் அவர்கள் ஆஜராகியும், அனைத்து மனுக்களிலும் 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஏ.சி. தேவக்குமார் அவர்கள் ஆஜராகியும், மற்ற எதிர்மனுதாரர்கள் அனைவரும் தோன்றா தரப்பினர்கள் நிலையில் வைக்கப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த அனைத்து மனுக் கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் கவனமாக பரிசீலனை செய்து, இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்து, இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ....

**<u>பொதுவான உத்தரவு</u>**

**01)** அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ள 1ம் மனுதாரர் இறந்துள்ள காரணத்தினால், அவருடைய சட்டப்படியான வாரிசுகளான 2,3 மனுதாரர்களை அசல் வழக்கில் கட்சி சேர்ப்பதற்காக மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**<u>02) இ.ம.எண்.222/2023, இ.ம.எண்.223/2023 மற்றும் இ.ம.எண்.224/2023 மனுக்களுக்கான பிரமாணப் பத்திரங்களின் பொதுவான சுருக்கம்:-</u>**

அசல் வழக்கானது 1ம் மனுதாரரால் , 1,2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் இருந்துள்ளபோது, கடந்த 18.07.2022-ல் 1ம் மனுதாரர் இறந்துள்ளார். அவருக்கு 2,3 மனுதாரர்கள் மட்டுமே சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள்.

1ம் மனுதாரரின் மகனாகிய 3ம் மனுதாரர் வியாபார விசயமாக வெளியூர் சென்று இருந்த காரணத்தால், வழக்கறிஞரை சந்தித்து 1ம் மனுதாரரின் இறப்பு குறித்து தெரிவிக்க இயலாமல் போய்விட்டது. 1ம் மனுதாரரின் கணவரான 2ம் மனுதாரர் வயதான காரணத்தினால் வழக்கறிஞரை தொடர்புகொள்ள முடியவில்லை.

ஆகையால், இறந்துள்ள 1ம் மனுதாரரின் சட்டப்படியான வாரிசுகளை வழக்கில் கட்சி சேர்ப்பதற்கு ஏற்பட்டுள்ள காலதாமதத்தை மன்னித்து, மனுக்களை அனுமதிக்க வேண்டுமென தனித்தனியாக மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**03) இ.ம.எண். 222/2023, இ.ம.எண்.223/2023, மற்றும் இ.ம.எண். 224/2023 மனுக்களுக்கான தனித்தனியாக 3ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் பொதுவான சுருக்கம்:-**

மனுச் சங்கதிகள் பொய்யானவை, தவறானவை. எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர, மற்றவற்றை மனுதாரர்கள் நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளனர். மனுக்களுக்கான தனித்தனியான பிரமாணப் பத்திரங்களில் மனுப் பரிகாரங்களுக்காக மனுதாரர்கள் கூறியுள்ள சங்கதிகள் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக் கூடியவை கிடையாது.

கடந்த 18.07.2022-ல் 1ம் மனுதாரர் இறந்துள்ளது தொடர்பாக இறப்பு சான்றிதழ் எதுவும் மனுதாரர்கள் தாக்கல் செய்யவில்லை. 1ம் மனுதாரருக்கு ரவி மற்றும் முரளி என இரண்டு மகன்கள் உள்ளனர். அவர்களில் ரவி என்பவர் இறந்துள்ள நிலையில் அவரின் மனைவியையும், மற்றொரு மகன் முரளி என்பவரையும் மனுவில் மனுதாரர்கள் கட்சி சேர்க்க தவறியுள்ளனர்.

இறந்துள்ள 1ம் மனுதாரரின் சட்டபடியான வாரிசுகளை வழக்கில் கட்சி சேர்க்க ஏற்பட்டுள்ள காலதாமத்திற்கு மனுதாரர்கள் தரப்பில்

முறையான காரணம் குறிப்பிடப்படவில்லை.

ஆகையால், வழக்கு விசாரணையை இழுத்தடிப்பு செய்யும் கெட்ட நோக்கில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும்.

04) இம்மனுக்களை பொறுத்த வரையில் மனுதாரர்களுக்கு அனைத்து மனுக்களிலும், மனுப் பரிகாரங்கள் கிடைக்கக்கூடியதா? இல்லையா ? என்பது இந்நீதிமன்றத்தால் முடிவு காண வேண்டிய தீர்வுக்குரிய பிரச்சனை ஆகும்.

<u>05) பிரச்சனைக்குரிய தீர்வு</u>

அனைத்து மனுக்கள் தொடர்பான இந்நீதிமன்ற விசாரணையில், இருதரப்பிலும் எந்தவொரு வாய்மொழி சாட்சியமும், ஆவணச் சான்றுகளும் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களை கேட்டு, வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் இந்நீதிமன்றம் கவனமாகப் பரிசீலனை செய்துள்ளது.

அசல் வழக்கினை உரிமை மூலம் விளம்புகை மற்றும் சுவாதீன ஒப்படைவு பரிகாரத்திற்காக 1ம் மனுதாரர், 1,2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் உள்ளது. 1ம் மனுதாரர் கடந்த 18.07.2022–ம் தேதி இறந்துள்ளதாக மனுக்களில் கூறப்பட்டுள்ளது.

இறந்துள்ள 1ம் மனுதாரரின் இறப்பு சான்று நகல் மற்றும் வாரிசு சான்று நகல் எதுவும் இம்மனுக்களில் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

இருப்பினும், மனுக்களை எதிர் வழக்காடியுள்ள 3ம் எதிர்மனுதாரர் தரப்பில், 1ம் மனுதாரர் இறக்கவில்லை என மறுத்து எந்தவொரு எதிர்வாதமும் செய்யப்படவில்லை. 1ம் மனுதாரருக்கு 2,3 மனுதாரர்களைத்

தவிர, ரவி மற்றும் முரளி என்ற இரண்டு மகன்கள் உள்ளதாக 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், அதற்கான ஆவணங்கள் எதையும் 3ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்யவில்லை.

இந்நிலையில், 1ம் மனுதாரருக்கு 2,3 மனுதாரர்களை தவிர வேறு சட்ட வாரிசுகள் உள்ளனர் என்பதை 3ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கு விசாரணையின்போது, நிரூபணம் செய்வதற்கு தகுந்த வாய்ப்புகள் உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, தற்போதைய சூழ்நிலையில், 1ம் மனுதாரரின் சட்டப்படியான வாரிசுகளாக மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள 2,3 மனுதாரர்களை அங்கீகாரம் செய்வது சட்டத்திற்கு உட்பட்ட நியாயமான செயல் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

1ம் மனுதாரர் இறந்ததற்குபின், 2ம் மனுதாரர் வயதான காரணத்தினாலும், 3ம் மனுதாரர் வியாபார விசயமாக வெளியூரில் இருந்த காரணத்தினாலும், வழக்கறிஞரை தொடர்பு கொண்டு, 1ம் மனுதாரரின் இறப்பு தொடர்பாக தகவல் தெரிவிக்க இயலவில்லை என்பதால், மனுக்கள் தாக்கல் செய்ய காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக மனுக்களில் கூறப்பட்டுள்ளது. அதற்கு ஆதரவாக மனுதாரர்கள் தரப்பில் எந்தவொரு சாட்சி, சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

இருந்தபோதிலும், வழக்கில் இறந்துள்ள தரப்பினர்களின் சட்டப்படியான வாரிசுகளை கட்சி சேர்ப்பதற்கு கடுமையான அணுகுமுறையை பின்பற்ற வேண்டிய அவசியம் கிடையாது என பல்வேறு முன்தீர்ப்புகளில் கூறப்பட்டுள்ள பொருண்மையை இந்நீதிமன்றம் கவனத்தில்கொள்கிறது.

அதனடிப்படையில், இறந்துள்ள 1ம் மனுதாரரின் சட்டப்படியான வாரிசுகளான 2,3 மனுதாரர்களை அசல் வழக்கில், கட்சி சேர்ப்பதற்கு ஏற்பட்டுள்ள காலதாமதத்தை மன்னித்து, மனுக்களை அனுமதிப்பது நீதியின்

நலனுக்கு உகந்தது என முடிவு செய்யப்பட்டு, அனைத்து மனுக்கள் தொடர்பான பிரச்சனைக்கும் இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

**06 )** முடிவில், இ.ம.எண்.222/2023, இ.ம.எண்.223/2023 மற்றும் இ.ம.எண்.224/2023 ஆகிய மனுக்கள் அனைத்தும் அனுமதிக்கப்பட்டு, பொது உத்தரவிடப்படுகிறது. அனைத்து மனுக்களிலும் செலவுத்தொகை எதுவும் இல்லை.

இப்பொது உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2024 ம் அன்று பிப்ரவரி மாதம் 26 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டடது.

B RAJA Digitally signed by B RAJA Date: 2024.02.26 12:48:17 -0700

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.

**மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு**

–

**சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–**

இல்லை

B RAJA Digitally signed by B RAJA Date: 2024.02.26 12:48:33 -0700

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.